# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE. TIRUVANNAMALAI.

## MCOP No. 873 of 2022

## Deposition of Witness for : RW 2

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Father/Husband Name | : | பிக்சாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2026

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் எங்கள் நிறுவனம் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் முதன்மை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. அதில் இடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. எங்கள் நிறுவன புலனாய்வு அறிக்கை எ.ம.சா.ஆ 3

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து ஏற்படுத்திய வாகனம் டி.என்.28 ப்பி. 5469 என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஈச்சர் வாகனம் என்றால் சரிதான். சார்ஜ் ஷீட் படி ஆட்டோ தான் விபத்தை ஏற்படுத்திய வாகனம். முதல் தகவல் அறிக்கையில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் ஈச்சர் வாகனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்குள்ளான வாகனம் ஆட்டோ என்றால் சரிதான். மணிகண்டன் த/பெ. ராஜா என்பவர் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், அவர் தான் ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர் என்றால் சரிதான். இறந்த ஆட்டோ ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் அமுலில் இருந்தது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் ஆட்டோ ஓட்டுநருக்கு உரிமம் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். இழப்பீட்டு தொகை அதிகமாக கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல. டி.என்.28 ப்பி. 5469 ஈச்சர் வாகனத்திற்கு விபத்து

சமயத்தில் பர்மிட் மற்றும் தகுதிச் சான்று இருந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய ஈச்சர் லாரி ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை காலாவதி ஆகிவிட்டது ஆனால் இளகு ரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் அமுலில் இருந்தது. விபத்து சமயத்தில் ஈச்சர் வாகனம் லோடு ஏற்றிச் சென்ற வாகனமா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. புலனாய்வு அறிக்கையில் மேற்படி விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக கனரக வாகனத்திற்கு 7 1/2 டன் லோடு வரை பேட்சே போதுமானது என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரைத்தான் புலனாய்வு அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவராக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புலனாய்வு அறிக்கை அவசர கதியில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஈச்சர் லாரிக்கு காப்பீடு அமுலில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி காப்பீடு பேக்கேஜ் பாலிஸியா என்றால் இல்லை. 3ம் தரப்பினர் பாலிஸி ஆகும். வாகன உரிமையாளருக்கு இன்சூரன்ஸ் பாலிஸி மேற்படி வாகனத்திற்கு எடுக்கவில்லை. இறந்த பிரபாகரன் எங்கள் நிறுவனத்தை பொருத்து 3ம் தரப்பினர் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை புகார் கொடுத்தவரின் பெயர் புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புலனாய்வு அறிக்கையில் ஆட்டோ ஓட்டுநர் மீதுதான் குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், ஈச்சர் வாகன ஓட்டுநர் தீடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஆனால் முதல் தகவல் அறிக்கையில் தீடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என கண்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கையிலும் புகார் கொடுத்தவர் இறந்தவரின் மனைவி தனலட்சுமி என கண்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் ஈச்சர் வாகனம் தீடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என கண்டிருந்தும், போலீசார் இயந்திர தனமாக புலன் விசாரணை செய்து Charge Abate செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இறந்தவரின் குடும்பத்தாருக்கு இழப்பீடு வழங்க எங்கள் நிறுவனம் கடமை பட்டது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.